பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 07 | திங்கட்கிழமை | 22.05.2023 | கதிர் 193

# கொழும்பில் மீண்டும் பாதுகாப்பு அதிகரிப்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு




கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுக்கள் போராட்டம் நடத்தப் போவதாகக் கிடைத்த தகவலை அடுத்து தலைநகரின் பாதுகாப்பு தரைப்படையினரின் உதவியுடன் கடந்த வாரம் திடீரென இறுக்கப்பட்டது. எனினும் அதன் பின்னர் எந்தவித அசம்பாவிதங்களும் நடக்காத நிலையில் அது தளர்த்தப்பட்டது. இப்போது பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. ☞2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையில் ஒரு காலத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பது என்பது உயிராபத்தான விவகாரம். அரச தரப்பு உறுப்பினர்கள் என்றால் புலிகள் எப்போது போடுவார்களோ என்று நடுங்கிச் சாகவேண்டும். இதுவே தமிழ்த் தேசிய உறுப்பினர்கள் என்றால் ஒட்டுக் குழுக்களோ, படைத்துறைப் புலனாய்வாளர்களோ எப்போதும் போடக்கூடும் என்ற அபாயம். இப்படி நித்திய கண்டம் பூரண ஆயுசாகக் கடந்து வந்தவர்கள் பலருண்டு. ஆனால், இப்போதெல்லாம் அப்படியில்லை. அது நல்ல வருமானம் தரக்கூடிய தொழில். சரியாகக் கணித்துச் செயலாற்றினால் மாதமொன்றுக்குப் பல லட்சங்களைத் திரட்டக்கூடிய தொழில். அதிலும் ஏதாவது இடக்கு முடக்கான நம்பிக்கை வாக்கெடுப்புக்கள் எல்லாம் வந்தால், 'லைவ் டைம் செட்டில்மென்டுடன்' அமைச்சுப் பதவியும்கூட வாய்க்கும்.

அந்த மாதிரி வாய்ப்புக்கள் எப்போதும் கிட்டும் என்று சொல்ல ☞2

## சிறுபோக விவசாயிகளுக்கு இன்று முதல் உர வவுச்சர்கள்

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்கான மானிய வவுச்சர்கள் இன்று முதல் வழங்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இரசாயன அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு மானிய வவுச்சர்கள் வடிவில் நிதி ஒதுக்கீடுகளை வழங்க அமைச்சரவை அண்மையில் முடிவு செய்திருந்தது.

இதன் மூலம் 650,000 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு 20,000 ரூபாயும், அதகபட்சமாக இரண்டு ஹெக்டேருக்கு 40,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும். ☞2

## 2024இல் ஜனாதிபதித் தேர்தல் ரணில் வெல்வது அவசியம்

### ஐ.தே.க. பிரதித் தலைவர் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறும் எனவும் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த பதவிக் காலத்திற்காகத் தெரிவு செய்வது அவசியம் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடி உருவாகுமென ஜனாதிபதி மூன்று வருடங்களிற்கு முன்னரே எதிர்வுகூறினார். கொரோனா பெருந்தொற்றிற்கு முன்னரே பொருளாதார நெருக்கடியை எதிர்வு கூறினார்.

அவரால் பொருளாதார நிலையை குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்ற முடிந்துள்ளது. கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு மீள்வதற்கு பத்து வருடங்கள் எடுத்தது. ஆனால் இலங்கை குறுகிய காலத்திற்குள் உறுதியான இடத்தை நோக்கி நகர்ந்துள்ளது இதன் காரணமாக விக்கிரமசிங்கவே நாட்டை ஆளவேண்டும். அனைத்துக் கட்சிகளும் பேதங்களைக் கைவிட்டு நாட்டின் நன்மைக்காக தேசியக் கொள்கைகளை உருவாக்க ஐக்கியப்படவேண்டும் - என்றார்.

## ஜனாதிபதி தலைமையில் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்திற்கு விரிவாக்க வாய்ப்பாம்

ஜனாதிபதி தலைமையில் நாட்டின் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதென்று தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

கேகாலை அரநாயக்க 'அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம' பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் சனிக்கிழமை கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி, பதவியேற்றதன் பின்னர் கேகாலை மாவட்டத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். இந்த மாபெரும் குடிதண்ணீர்த் திட்டத்தை மக்களுக்கு கையளிக்கவே வருகை தந்துள்ளார்.

இந்த மாபெரும் குடிதண்ணீர்த் திட்டம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது தொடங்கப்பட்டது. ஆனாலும் அது ☞2

## மருத்துவரை மீண்டும் நியமிப்பதற்கு வலியுறுத்திப் பளையில் போராட்டம்




கிளிநொச்சி பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக வைத்தியர் சின்னையா சிவரூபனை மீண்டும் நியமிக்குமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பளை வைத்தியசாலை முன்பாக பிற்பகல் 2.30 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள மருத்துவர் சிவரூபன், ☞2

## ஜனாதிபதி ரணில் இன்று பெரமுனவின் விசுவாசி

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. விளாசல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுன கட்சியின் விசுவாசியாகி விட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் தங்களின் தலைவர் என்று இப்போது அழைப்பதில்லை. அவரை பொது ஜன பெரமுனவின் தலைவர் என்றே அழைக்கின்றார்கள். அந்தளவிற்கு அவர் அக்கட்சிக்கு விசுவாசமாக உள்ளார்.

இந்த நிலையில் அநுராதபுரத்தில் ☞2

## இந்து, பௌத்த, இஸ்லாமியர்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்டார் ஜெரோம்

மத நல்லிணக்கத்திக்கு எதிராக கருத்து வெளியிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இந்து, பௌத்த மற்றும் இஸ்லாமிய மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.

பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் உணர்வுகளை எந்த வகையிலும் புண்படுத்தியிருந்தால் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கில் கருத்துக்களை வெளியிட்டாக கூறுப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்புவதற்கு தேவையான விமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி இரவு 11.45 மணியளவில் சிங்கப்பூரில் இருந்து புறப்படும் விமானத்தில் அவர் இலங்கைக்கு வருவதற்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அவர் நாட்டை வந்தடைந்தால் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## போலிக் கடவுச் சீட்டுகளுடன் சிக்கிய 2 சீனரை நாட்டுக்குள்விட்ட அமைச்சர்

### முதலீட்டாளர்கள் என்று அதிகாரிகளுக்கு விளக்கம் வேறு

போலிக்கடவுச்சீட்டுக்கள் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்றதாக கூறப்படும் இரு சீனர்கள் மற்றும் அவர்களுடன் வருகை தந்தார்கள் எனக் கூறப்படும் எகிப்து நாட்டவர் ஒருவரும் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ தலையிட்டு அவர்களை விடுவித்து நாட்டுக்குள் நுழைய வழியேற்படுத்திக் கொடுத்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரின் கடிதத்தை அடுத்து அந்த மூவரும் நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர் என்று குடிவரவு குடியகல்வு திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

இராஜாங்க அமைச்சர் அருந்திகபெர்ணான்டோவின் எழுத்து மூல கோரிக்கையை அடுத்து, குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர் இலுப்பிட்டிய, விமான நிலைய கடமைநேர அதிகாரிகளுக்கு வழங்கிய உத்தரவுக்கு அமைய, மூவரும் விடுவிக்கப்பட்டு நாட்டுக்குள் நுழைய னுமதிக்கப்பட்டுள்ளனர்.

மே 18 இரவு 9.50 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஈ.கே. 648 எனும் விமானத்தில் இந்த மூவரும் வருகை தந்திருந்தனர். இந்த மூவரும் முதலீட்டாளர்கள் எனக்கூறி இராஜாங்க அமைச்சர் எழுத்து மூலம் குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தார். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் அந்த மூவரையும் அதிகாலை ஒரு மணிக்கு நாட்டுக்குள் நுழைய அனுமதித்தனர்.

## நரம்பில்லாத நாக்கால் பெமுனவினர் உளறல்

### ரணில் குறித்த கருத்துக்களுக்கு விமல் காட்டம்

பொது ஜன பெரமுனவினர் நரம்பில்லாத நாக்கால் உளறுகிறார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறித்து பெரமுனவினர் கூறிவரும் கருத்துக்கள் குறித்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டில் பிரதமரான ரணில் தலைமையில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி இடம்பெற்றது. இந்த மோசடி இடம்பெற்ற காலத்தில் ரணிலை மிக மோசமாகத் திட்டினார்கள். பிணைமுறிகளை திருடியவர் என்றும் நாட்டை விற்றவர் என்றும் விமர்சனம் செய்தார்கள்.

தற்போது, அவர் ஜனாதிபதியாகியவுடன் மிகச் சிறந்த தலைவர் என்கிறார்கள். அவர் சிறந்த ஆளுமை மிக்கவர்கள் என்கிறார்கள். பாராட்டுகிறார்கள். இவர்கள் எவ்வாறுதான் மாற்றி மாற்றிப் பேசும் நாக்கால் உளறுகிறார்களோ தெரியவில்லை. நாக்கே இப்படியென்றால் இவர்களின் வயிறு எப்படி இருக்கும்?

நாக்கில் நரம்புகள் இல்லை. அதனால் பொதுஜன பெரமுனவினர் மிகவேமாக அதனைத் திருப்பியுள்ளனர் - என்றார்.

### ஜனக்க ரத்நாயக்கவிற்கு எதிரான

## வாக்கெடுப்புத் தொடர்பில் தமிழ் அரசு நாளை தீர்மானம்

கொழும்பு, மே 22

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்வது தொடர்பிலான விவாதம் நடைபெறவுள்ள நிலையில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பனர்கள் கூடி இது தொடர்பில் முடிவெடுக்கவுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவரை நீக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்கெடுக்கப் போதுவதில்லை என்று சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்,

தமது தரப்பின் தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் குறித்து பிரேரணையை எதிர்க்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முடியாது. கிடைக்கும் போது கப்பெனப் பிடித்துப் பயன்படுத்திக்கொண்டால் தான் உண்டு. அதுவும் தவிர, அவ்வப்போது ஏதாவது கொசுறுவாய்ப்புக்களும்கூடக் கிடைக்கும். கமுக்கமாக அவற்றை கையாள்வது ஒரு கலை. அதில் தேர்ச்சி பெற்ற பலர் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பலர் இருக்கின்றனர். இப்போது அப்படியொரு வாய்ப்புமீண்டும்வந்துள்ளது.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரைப்பதவிநீக்கும்பிரேரணை மீதான வாக்கெடுப்பு மே 24 நாடாளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது. ஆனால், அதற்குத் தேவையான 113 உறுப்பினர்களின் ஆதரவு ஆளும் தரப்புக்குக் கிட்டுமா என்கிற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆளும் தரப்பான மொட்டு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் வசம் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், அவர்களில் அமைச்சர்களான 10 பேர் வெளி நாடுகளில் உள்ளனர். அவர்கள் வாக்கெடுப்புக்கு முன்னர் நாடு திரும்பும் சாத்தியமில்லை. இவர்கள் தவிர, மொட்டுக் கட்சியைச் சேர்ந்த மேலும் 20நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆணைக்குழுத் தலைவர் ஜானக்க ரட்ணாயக்கவுக்கு எதிராகத் தாங்கள் வாக்களிக்கப்போவதில்லை என்பதை மகிந்த மற்றும் நாமல் ராஜபக்சக்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர். ஜானக்க மக்களுக்கு ஆதரவாகத்தான் அமைச்சர் காஞ்சனவுடன் முரண்பட்டார் என்பதால் அவருக்கு எதிராக வாக்களிக்க முடியாது என்று அவர்கள் கூறினர். எனவே அனேகமாக அவர்கள்வாக்கெடுப்பிலிருந்து விலகி இருப்பார்கள். மொத்தத்தில் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஆளும் தரப்புக்கு இல்லாத நிலையே இருக்கிறது.

இந்த நிலையில் பெரும்பான்மையைநிரூபிப்பதற்குத் தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஆளும் தரப்பு வசம் இல்லை. கைவசம் 90 உறுப்பினர்களின் ஆதரவு தான் உண்டு. எனவே குறைந்தபட்சம் இன்னும் 113 பேரின் ஆதரவு வேண்டும். இந்தப்பிரேரணையில் தோல்வியுற்றால் ஆளும் தரப்பின் மரியாதை காற்றில் பறந்துவிடும். அதனால் இதை எப்படியாவது வெற்றிகொண்டாகவேண்டிஇக்கட்டு ஆளும் தரப்புக்கு.

இதற்காக மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் நாட்டில் இருப்பவர்கள் அனைவரையும் வாக்கெடுப்பின்போது நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவருவதற்கான பொறுப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் ஒப்படைக்கபட்டுள்ளது. அதுபோன்றே எஞ்சிய தேவைக்கு முஸ்லிம் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் பொறுப்பு ஆளும் தரப்பைச்சேர்ந்தவரானலிமல் லன்ஸாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான பொறுப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்குத்தமக்கு உதவக்கூடிய முஸ்லிம் மற்றும் தமிழ் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறிவைத்துத் தனது நடவடிக்கையைத் தொடங்கியுள்ளார் லன்ஸா. இனியென்ன அவர்களின் காட்டில் பண மழைதான்.

- இடிமின்னல் -

## ஜனாதிபதி ரணில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ள ஒரு முன்னாள் உறுப்பினர் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக பகிரங்கமாக அறிவித்தார். அவர் எந்த எதிர்பார்ப்பும் இல்லாது தான் அந்த அறிவிப்பைச் செய்வதாக கூறினார்.

இருப்பினும், அவர் பதவியை எதிர்பார்த்தே அந்த அறிவிப்பை விடுத்தார். குறிப்பாக ஆளுநர் பதவியை எதிர்பார்த்தே அவர் அந்த அறிவிப்பைச் செய்தார். இருப்பினும் ஈற்றில் அது நடைபெறவில்லை. ஏமாற்றத்துடன் இருக் கின்றார் என்றார்.

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அதன் பயனை மக்களுக்கு வழங்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய பல சுற்றுலாத் தலங்கள் உள்ளன. யானைகள் சரணாலயம், மிருகக் காட்சி சாலை, கித்துல்கல ராப்டின் விளையாட்டு போன்றவற்றின் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியும்.

ஜனாதிபதி தொடர்ந்து கூறும் பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் இந் நாட்டின் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்திற்கு கொண்டுசெல்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார்

## சிறுபோக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் இவ்வருடம் சிறுபோகநெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 650,000 விவசாயிகளுக்கு இந்த வவுச்சர்கள் வழங்கப்படுவதாகவும், இந்த வவுச்சர்கள் மூலம் விவசாயிகள் இரசாயன உரங்கள் அல்லது சேதன உரங்களை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளின் விருப்பத்திற்கிணங்க, இரண்டு அரச உர நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் இரசாயன அல்லது சேதன உரங்களை அனைத்து உழவர் சேவை மையங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் கொள்முதல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மருத்துவரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தனது கடமைகளைப் பொறுப்பேற்க சுகாதார அமைச்சு இன் னும் அனுமதி வழங்கவில்லை.

அவர் கடமைக்குத் திரும்பி மக்களுக்குச் சேவையாற்றத் தயாராக இருக்கிறார், எனவே அமர்த்துவதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேணடும் எனப் போராட்டத்தில் ஈடுட்டவர்கள் வலியுறுத்தினர்.

குறித்த வைத்தியர் கடந்த 18.08.2019 அன்று பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட மருத்து-வர், 09.02.2023 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்டதைத் தொடரந்து குறித்த வைத்தியசாலையில் பதில் கடமையில் ஈடுபட்டுவருகிறார் மருத்துவர். ஆனால் உத்தியோகபூர்வமாகப்பொறுப்புக்கள்எவையும் அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. நிலையில், அவரை உடனடியாகப் பொறுப்புக்களுடன் மீண்டும் நியமிக்க வலியுறுத்தும் பதாகைகளைத் தாங்கயபடி போராட்டக்காரர்கள் வைத்தியசாலை முன்பாக விதியோரம் சில மணி நேரம் நின்றிருந்தனர். (113)

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பு, களனி, சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பை இறுக்கமாக்குமாறும் இரவு நேர சுற்றுக்காவல்களை அதிகரிக்குமாறும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்தப் பல்கலைக்கழங்களின் துணைவேந்தர்களுக்கும் அமைச்சருக்கும் இடையில் அண்மையில் நடந்த தனியான சந்திப்பின்போது அவர்களால் பாதுகாப்புத் தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ மா அதிபர் மற்றும் மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரும் அமைச்சர் - துணைவேந்தர்கள் சந்திப்பின்போது உடனிருந்தனர். இந்தச் சந்திப்பில் பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு எப்படியிருக்கின்றது என்று கேட்டபோது, மாணவர் விடுதிகளின் அருகில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படவேண்டும் என்று கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோரினார் என்று கூறப்படுகின்றது.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் திருட்டுக்கள் அதிகரித்திருப்பதாகவும் கொழும்பு துணைவேந்தர் அப்போது தெரிவித்தார். அதனைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி பொலிஸ் மா அதிபர் உடனடியாகவே தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மற்றைய பல்கலைக்கழங்களின் துணைவேந்தர்களுடன் நடத்திய சந்திப்புக்களின்போதும் பெண் மாணவர்களின் விடுதிகளுக்கு அருகே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது என்று கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622









காலைக்கதிர் Kalaikkathir

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் சர்வதேச சமூகத்தின் மீது கோபப்படுவதில் அர்த்தமில்லை

## தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 22

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான கடந்த 14 வருடங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் காலந்தாழ்த்தி விட்டு, அதனை ஏனைய சர்வதேசநாடுகள் வலியுறுத்திக் கூறியவுடன் கோபப்படுவதில் அர்த்தமில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், இவ்விவகாரத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது சர்வதேச நீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க கனடா முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

மனித உரிமைகள், சமாதானம் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை விட்டுக் கொடுத்துவிட முடியாது என்பதற்கான நினைவூட்டல்களாக போரால் பாதிக்கப்பட்ட கனேடிய தமிழர்களின் கதைகள் உள்ளன.

எனவே, போரால் பாதிக்கப்பட்ட மற்றும் தொடர்ந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவரும் இலங்கையர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதை முன்னிறுத்திய செயற்பாடுகளை கனடா ஒரு போதும் நிறுத்தாது என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

கனேடிய பிரதமரின் கருத்தை கடுமையாக கண்டித்து நிராகரிப்பதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எவ்வித ஆதாரங்களுமின்றி முன்வைக்கப்படும் 'இனப்படுகொலை' தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கையர்களை துருவமயப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுகுறித்து கருத்து வெளியிட்ட தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், பொறுப்புக்கூறல் விவகாரத்தை பொறுத்தமட்டில் இதுவரையில் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்றும், அவ்வாறு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கை நடுநிலையுடன் இருக்கவேண்டுமானால், அது சர்வதேச பொறிமுறையாக அமையவேண்டியது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான கடந்த 14 வருடங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான எந்தவொருநடவடிக்கையையும் எடுக்காமல் காலந்தாழ்த்திவிட்டு, அதனை ஏனைய சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கூறியவுடன்கோபப்படுவதில்அர்த்தமில்லை என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்பட்ட நாடுகளில் கனடாவும் ஒன்று எனவும், கனடா மாத்திரமன்றி ஏனைய சர்வதேச நாடுகளும் இவ்விடயத்தை வலியுறுத்தி வருகின்றன என்றும் குறிப்பிட்ட அவர், எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச சமூகம் நிச்சியமாக அழுத்தம் பிரயோகிக்கும் எனவும் கூறினார்.

அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை கனடா ஏற்றுக்கொண்டமையை வரவேற்பதாகத் தெரிவித்த தமிழ் தேசிய மக் கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் என்பது கடந்த 12 வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே முடங்கிப்போயிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

எனவே, இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது சர்வதேசநீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க கனடா முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதுமாத்திரமன்றி, இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்று முடிந்த விடயங்கள் தொடர்பில் கனடா கவலையை வெளிப்படுத்தியுள்ளமை ஆறுதலளிக்கின்ற போதிலும், தற்போது நாட்டில் இடம்பெற்றுவரும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக கனடா முன்நின்று செயற்படவேண்டும் என்றும் கஜேந்திரன் எம்.பி வலியுறுத்தியுள்ளார். (05)

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய புதிய ஏற்பாட்டாளராக மதுன்

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய ஏற்பாட்டாளராக மதுன் சந்திரஜித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நேற்று சனிக்கிழமை (20) ரஜரட்டை பல்கலைக் கழகத்தில் நடந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடலில் மதுன் தெரிவாகியுள்ளார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஆவார்.

இதற்கு முன்னர் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளராக வசந்த முதலிகே கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (05)

## கம்பளையில் பொலிஸார் துப்பாக்கி சூடு: இளைஞன் காயம்; நாயொன்று சாவு!

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததோடு, நாயொன்று இறந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக் கிழமை காலை கம்பளையில் இடம்பெற்றது.

கம்பளை - பன்விலதென்ன பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே 18 வயதுடைய இளைஞர் காயமடைந்துள்ளார்.

பன்விலதன்ன பகுதியிலுள்ள வீடு ஒன்றில் மதுபான வியாபாரம் இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போதே குறித்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், குறித்த வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த நாய் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளது. (05)

## வீடொன்றில் அம்புலன்ஸ் சாரதியுடன் மனைவி: ஆத்திரமடைந்த கணவர் சாரதிமீது கத்திக்குத்து!

*அம்பாந்தோட்டை, மே 22*

*அம்பாந்தோட்டை கட்டுவெள பிரதேசத்தில் அம்புலன்ஸ் சாரதி ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என அம்பாந்தோட்டை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*அம்புலன்ஸ் சாரதி மற்றுமொரு பெண்ணுடன் கட்டுவெ பிரதேச வீடு ஒன்றிலிருந்தபோது குறித்த பெண்ணின் கணவர் அங்கு வந்துள்ளார்.*

*அங்கு தனது மனைவி அம்புலன்ஸ் சாரதியுடன் காணப்படுவதைக் கண்ட கணவர், சாரதியைக் கத்தியால் தாக்கியுள்ளார்.*

*இதனையடுத்து காயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான அம்புலன்ஸ் சாரதி அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் பணிபுரிபவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)*

## கான்ஸ்டபிளை கட்டையால் தாக்கிய நபர் கைதாகினார்!

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கட்டையால் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை காலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் புத்தல நீர் வழங்கல் சபைக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட முற்பட்டுள்ளனர்.

இதன்போதே சந்தேக நபர் ஒரு பொலிஸ் அதிகாரியின் தலையில் தடியால் தாக்கியுள்ளார்.

அப்போது அங்கிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபரை கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் புத்தல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (05)




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் – சஜித் போட்டியில் தமிழர்கள் யார் பக்கம்?

**அடுத்த ஆண்டு அரசுத் தலைவர் தேர்தல் நடக்கும் என்று பலரும் கூறுகின்றார்கள். அரசமைப்பில் உள்ள பிரிவுகளின்படி இன்று பதவியில் இருக்கும் அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு முன்கூட்டியே தேர்தலை நடத்தும் அதிகாரம் இல்லை. எனவே 2024 கார்த்திகை மாதம் வரையில் தேர்தலை நடத்துவதற்கு வழியில்லை. ஆனால், தற்போதைய ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதன் காரணத்தாலும், எதிர்க் கட்சிகளும் அரசுத் தலைவர் தேர்தலை எதிர்கொள்ளும் ஆர்வத்தில் இருப்பதன் காரணமாகவும், அரசமைப்புத் திருத்தம் ஒன்றை நிறைவேற்றி, அதன் மூலம் தேர்தலை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது.**

**அப்படி நடக்கக்கூடும் என்கிற எதிர்பார்ப்போடுதான் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசுத் தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை அந்தக் கட்சியின் செயற்குழு ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது. ஆளும் தரப்புப் பக்கத்தில் பொது ஜன பெரமுன கட்சி சார்பில் தனியொரு வேட்பாளரை நிறுத்துவதா அல்லது ரணிலை ஆதரிப்பதா என்கிற முடிவு எடுக்கப்படவில்லை என்றபோதும் தேர்தல் களத்தில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இருப்பார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. தேர்தலை நடத்தி அதில் வெற்றிபெற்றால், தன்மீது இப்போது வைக்கப்படும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத – புறக்கணிக்கப்பட்ட – தலைவர் என்கிற விமர்சனங்களை உடைத்தெறிந்து இன்னும் ஆணித்தரமாகத் தனது திட்டங்களைச் செயற்படுத்த முடியும் என்று ரணில் கருதுகின்றார்.**


**எனவே தேர்தல் நடக்கும்போது அதில் ரணில் மற்றும் சஜித் இருவருமே முதன்மைப் போட்டியாளர்களாக இருப்பார்கள். இவர்களைவிட வேறு பலரும் இந்தப் போட்டியில் இருப்பார்கள் எனினும் அவர்கள் வெற்றி பெறும் வாய்ப்பைக் கொண்டிருப்பார்களாக என்பது கேள்விக்குறி. இத்தகைய நிலையில் ரணில் அல்லது சஜித் என்கிற இருவரில் ஒருவர் என்கிற தெரிவு வருகின்றபோது யாரைத் தமிழர் தரப்பு ஆதரிக்கும்?**

**கடந்த கால வரலாற்றில் இந்த இருவரையுமே வெவ்வேறு தேர்தல்களில் தமிழர் தரப்புகள் ஆதரித்து வந்திருக்கின்றன. 2015இல் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ரணிலைத் தலைமை அமைச்சராகவும் மைத்திரிபால சிறிசேனவை அரசுத் தலைவராகவும் கொண்ட ஆட்சி அமைவதற்கான முக்கிய பங்காளியாகவும் தமிழர் தரப்பு இருந்துள்ளது. 2019 தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக சஜித் பிரேமதாஸவை தமிழர் தரப்பு ஆதரித்தது. அதற்கு முன்னர் மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக, ரணிலின் தெரிவாகவும் இருந்தவரான சரத் பொன்சேகாவை ஆதரித்திருக்கிறது. ராஜபக்சக்களுக்கு எதிராக மற்றொருவரை ஆதரிப்பதில் தமிழர் தரப்புக்கு பெரும் சங்கடங்கள் ஏதுமில்லை. இனப்படுகொலையை நடத்திய ராஜபக்சக்கள் தோற்கடிக்கப்படவேண்டும் என்கிற பொதுப் புத்தி, எண்ணம், சிந்தனை எல்லாமே தமிழ் மக்களிடமும் இருப்பதனால் இந்த விடயத்தில் முடிவெடுப்பது சுலமும்கூட. ஆனால் இனி வரப்போகும் தேர்தலில் ரணிலா சஜித்தா என்று வரப்போகையில் யாரை ஆதரிப்பது?**

**வழக்கம் போல தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பான கதையாடல்களைத் தொடங்கி அவசர கோலத்தில் ஒரு முடிவுக்குச் செல்வதற்குப் பதில் தமிழ்ச் சமூகம் இது தொடர்பான உரையாடல்களை இப்போதிருந்ததெ தொடங்கி ஒரு சிறந்த முடிவுக்கு வருவதே சிறப்பானது. கட்சிகள் தமக்குள் மட்டுமல்லாது பல தரப்பட்ட மட்டங்களிலும் இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி, துறைசார் ஆய்வுகளையும் நடத்தி, அறிஞர்களின் ஆலோசனைகளையும் பெற்று அடுத்து வரும் அரசுத் தலைவர் தேர்தலை எப்படி பொறிமுறை ரீதியில் தமிழர்களுக்குச் சார்பானதாக மாற்றிக்கொள்ள முடியும் என்று பார்த்து எந்தப் பக்கம் சாய்வது என்கிற முடிவை எடுப்பதே சிறந்தது.**

**ரணில் தீர்வைத் தரவில்லை அதனால் சஜித் என்று மேம்போக்காகத் தீர்மானிப்பது அபத்தமாக இருக்கும். ஏனெனில் அரசமைப்பின் 13ஐத் தாண்டித் தீர்வைத் தரும் நிலைப்பாட்டில் சஜித்தும் இல்லை. எனவே அரசியல் இராஜதந்திர ரீதியில் இதனைத் திறம்படக் கையாற்வதற்கான உத்திகளைத் தமிழர் தரப்பு இப்போதே தொடங்கவேண்டும்.**

## இலங்கையில் முதலீடுகளைச் செய்யுங்கள் புலம்பெயர் தமிழர்களிடம் ரணில் கோரிக்கை!




போரால் ஏற்பட்ட அச்ச நிலை காரணமாக இடம்பெயர்ந்து பன்னாடுகளிலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் வர்த்தகங்களை முன்னெடுக்கவும், முதலீடுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளன என தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு தேவையான ஒழுங்குகளைசெய்யுமாறும்ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயத்தை ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கருத்துரைத்த ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார,

புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்புகொண்டு கலந்துரையாடினர்.

குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளனர். சம்பிரதாயபூர்வமான தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போதுநம்பிக்கைஇல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை.

இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர்தமிழர்கள் விரும்புகின்றனர். வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர்.

எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள்ளேன். எனவே, இந்த நேரத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிப்பது சிறந்தது என்று நீண்ட விளக்கத்தை அளித்தார்.

இதற்கு மறுமொழியளித்து ஜனாதிபதி ரணில் கூறுகையில், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அழையுங்கள். அவர்களுக்கு தேவையன ஒத்துழைப்புகளை வழங்குங்கள். அரசியலில் ஈடுபடும்போது, உலக அரசியல் போக்கை போன்று தேசிய அரசியல் நகர்வுகள் குறித்தும்மதிப்பாய்வுசெய்யுங்கள். இது அனை வருக்கும் முக்கியமானதுஎனகூறினார். (05)

## தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட தீர்மானம்!

### நிறைவேற்ற மாவை பிரயத்தனம்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டமும் மாநாடும் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான போட்டிக் களத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், வடமாகாண சபையின் தவிசாளரான சீ.வி.கே. சிவஞானமும் உள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக்கூட்டமும் வருடாந்த மாநாடும் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வருகின்றமை மற்றும் கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கான போட்டிகள் எழுந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டாரக் கிளைகள் தெரிவு செய்யும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்தப் பணிகள் இன்னமும் முழுமை அடையவில்லை.

இந்த நிலையில் குறித்த பணிகள் பூர்த்தியான கையோடு நாம், கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பதவிநிலைகளுக்கான விண்ணப்பங்களைக் கோரவுள்ளோம்.

அந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பதவி நிலைகளுக்கு விண்ணப்பிப்பார்களாயின் அவர்களை நேரில் அழைத்து இணக்கப்பாட்டின் அடிப்படையில் புதிய தெரிவுகளை மேற்கொள்வதற்கு முயற்சிகளை எடுப்போம்.

இணக்கப்பாடுகள் எட்டப்படாதவிடத்து நாம், பொதுச்சபை உறுப்பினர்களிடையே வக்கெடுப்புக்கு நடத்தப்பட்டு புதிய நியமனங்களைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

**போட்டியில் மூவர்**

தற்போதைய நிலையில் கட்சியின் தலைமைப்பதவிக்கு மூவர் போட்டியிடப்போகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சிறீதரன், சுமந்திரன் மற்றும் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் தான் இவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றமை பகிரங்கமான விடயமாகும். அவ்வாறான நிலையில் போட்டிகளைத்தவிர்த்து இணக்கப்பாட்டின் அடிப்படையில் புதிய தலைமை உட்பட கட்சியின் பதவி நிலைகளுக்கு நியமனங்களைச் செய்வதற்கே நான் முயற்சிக்கின்றேன். அதனடிப்படையில் அதுதொடர்பானவிடயங்கள் பொதுச்சபைக் கூட்டத்துக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் முன்னெடுக்கப்படும்.

**கோரிக்கைகள் உள்ளன**

என்னைப்பொறுத்தவரையில் நான் இரண்டு தடவைகள் கட்சியின் தலைமைப்பதவியை வகித்த நிலையில் தற்போது மூன்றாவது தடவையாகவும் தொடர்ந்து கொண்டுள்ளேன்.

ஏலவே 2019ஆம் ஆண்டு இளையவர்களிடத்தில் பதவி நிலையை வழங்குவதற்குதீர்மானித்துநான் விலகுவதற்குத் தீர்மானித்திருந்தபோதும, பலரது கோரிக்கைகள் காரணமாக அந்தப் பதவியில் தொடர வேண்டியிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போதும், இளையவர்களிடத்தில் ஒப்படைப்பதற்கே நான் விரும்புகின்றேன். இருப்பினும் என்னையும் தலைமைப்பதவியில் நீடிக்குமாறு கோருகின்ற தரப்பினர்களும் உள்ளார்கள். ஆகவே அதுபற்றி நான் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை.

**கூட்டமைப்பு தீர்மானம்**

இதேவேளை, கடந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட வேளையில் இலங்கைத் தமிரசுக்கட்சி தனியாகப் போட்டியிடுவதாகத் தீர்மானித்திருந்தது. இதில் எனது முழுமையான சம்மதமும் காணப்படாத போதும் கட்சிக்குள் பெருவாரியானவர்களின் கோரிக்கையால் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் எமது வருடாந்தக் கூட்டத்தொடர் மற்றும் மாநாட்டின்போது, தமிழ் மக்களின் விடயங்களை இலங்கைத்தமிரசுக்கட்சி ஏனைய அனைத்துதமிழ்த்தேசியக்கட்சிகளையும் ஒருங்கிணைத்து கூட்டமைப்பாக ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

இதனைவிடவும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகக்கான நிரந்தரதீர்வு, உடனடிப்பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியன தொடர்பிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. - என்றார். (05)

## ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியும் குதிப்பார்

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசஸ ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவருக்கு ஆதரவளிக்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே களமிறக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஐக்கியமக்கள்சக்தியின்செயற்குழுக் கூட்டம்கடந்தசெவ்வாயன்றுஇடம்பெற்றபோது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித் பிரேமதாசவே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படுவார் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் களமிறக்கப்பட்டாலும், தற்போது நாடாளுமன்றத்தில் எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடம் அவருக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பேச்சுகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுதந்திர கட்சியிடம் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் அந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமா? அல்லது சு.க. சார்பில் வேட்பாளர் ஒருவரை நியமிக்கும் எண்ணம் காணப்படுகிறதா என்று வினவிய போதே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சுதந்திர கட்சி சார்பில் தான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளார். இதுவரையில் அந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை.

எதிர்க்கட்சி தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள போதிலும், அவருக்கு ஆதரவளிக்குமாறு இதுவரையில் எம்மிடம் எந்தவொரு கோரிக்கையோ அல்லது பேச்சுக்கான அழைப்போ விடுக்கப்படவில்லை. - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சரவையை விரிவுபடுத்துவது அவசியமற்றது என்கிறார் ஜகத்குமார



அமைச்சு பதவிகளுக்காக எதிர்க்கட்சியினர் ஆளும்தரப்புக்கு வருவதும், அமைச்சு பதவி இல்லை என ஆளும் தரப்பினர் எதிர் தரப்புக்கு செல்வதும் முறையற்றதொரு செயற்பாடாகும். நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்குபவர்களை மாத்திரம் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவி-யலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு பலமுறை அழைப்பு விடுக்கப்பட்ட போது எவரும் முன்வரவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் பொருளாதாரப் பாதிப்புக்கு தற்காலிக தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

நாடு இயல்பு நிலைக்கு திரும்பியதன் பின்னர் எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைய அவதானம் செலுத்தியுள்ளார்கள்.

அமைச்சு பதவிகளுக்காக எதிர்க்கட்சியினர் ஆளும் தரப்புக்கு வருவது-ம், அமைச்சு பதவிகள் இல்லாத காரணத்தால் ஆளும் தரப்பினர் எதிர்க்கட்சி பக்கம் செல்வதும் முறையற்றதாகும்.

நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களை விரிவுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரச நிதி அரசியல்வாதிகளை நிர்வகிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றமை உண்மை என்ற நிலையை அரசாங்கம் தோற்றுவிக்க கூடாது.

அமைச்சு பதவிகளுக்காக அரசாங்கத்தில் ஒன்றிணைய எதிர்பார்த்துள்ளவர்கள் தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும். நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்கும் தரப்பினரை மாத்திரம் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். என்றார். (05)

## தாய்முன் விசேட தேவையுடைய மகள் பாலியல் துஷ்பிரயோகம்

### பொலிஸ் கான்ஸ்டபிளை கைதுசெய்ய நடவடிக்கை

26 வயதுடைய விசேட தேவையுடைய யுவதி ஒருவரை அவரது தாயார் முன்னிலையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்து தாக்கியதாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்வதற்கான விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைதுசெய்ய தேடப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் வாழைத்தோட்ட பொலிஸில் இணைக்கப்பட்டு கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பணிபுவதாகத் தெரியவருகிறது.

கான்ஸ்டபிளின் நோய்வாய்ப்பட்ட தாயாரைக் கவனிப்பதற்காக குறித்த யுவதியும் அவரது தாயும் இரண்டு வருடங்களாகக் கான்ஸ்டபிளின் வீட்டில் தங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள், தனது பணப்பையிலிருந்த 10,000 ரூபா பணத்தைக் காணவில்லை எனக்கூறி தாய் மற்றும் மகளை அறைக்கு அழைத்துச்சென்றே இவ்வாறு நடந்து கொண்டுள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (05)

## இடைநிலைத் தரங்களுக்கு மாணவர்கள் சேர்க்கை தேசிய பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 22

தேசியபாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான கடிதங்களை கல்வி அமைச்சு வெளியிடுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (05)

## இலங்கையை சேர்ந்த இளைஞன் ஆஸ்திரேலியாவில் சடலமாக மீட்பு

### விசாரணைகள் ஆரம்பம்

ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரில் டிரன்மரே பொய்ன்ட் என்ற பகுதியில் இலங்கை இளைஞர் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பாக ஆஸ்திரேலிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

18 முதல் 25 வயதிற்குட்பட்ட இலங்கையர் என கருதப்படும் இளைஞனை சடலமாக மீட்டுள்ளார் என ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணம் தொடர்பில் சந்தேகம் உள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் மருத்துவபரிசோதனைகள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்துள்ளனர்.

இளைஞன் வேறு ஒருபகுதியில் நீரில் தவறி விழுந்திருக்கலாம் அவரது உடல் இந்த பகுதிக்கு அடித்து வரப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## ஐக்கிய குடியரசு முன்னணி இன்று அங்குரார்ப்பணம்

### சம்பிக்க தலைமையில்



நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி என்ற புதிய அரசியல் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று (திங்கட்கிழமை) மஹரக தேசிய இளைஞர் கழக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கனேசன் உட்பட முக்கிய தரப்பினர் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க 43ஆவது படையணி என்பதை ஆரம்பித்து செயற்பாட்டு ரீதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இளைஞர், யுவதிகளை முன்னிலைப்படுத்தி புதிய அரசியல் கட்சியான 'ஐக்கிய குடியரசு முன்னணி' அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய குடியரசு முன்னணி கட்சியை முன்னிலைப்படுத்தி போட்டியிடுவார் என அரசியல் களத்தில் குறிப்பிடப்படுகிறது. (05)

## இலங்கை - அமெரிக்கா சோபா உடன்படிக்கையை செய்வது குறித்து தற்போது சிந்திக்கவில்லையாம்

### அமெரிக்க அதிகாரி கூறுகிறார்



இலங்கையுடன் மீண்டும் புதிய சோபா உடன்படிக்கை எதனையும் முன்னெடுக்கும் திட்டம் எதுவுமில்லை என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பணியகத்தின் துணை உதவிச்செயலாளர் அப்ரீன் அக்தர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் சோபா உடன்படிக்கையை செய்துகொள்வது குறித்து தற்போது அமெரிக்கா சிந்திக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாங்கள் தற்போதைக்கு சிந்திக்கவில்லை என அப்ரீன் அக்தர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் சோபா உடன்படிக்கையை செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் 2019 இல் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இந்த நிலையில் அமெரிக்கா இலங்கையுடன் தொடர்ந்தும் நெருக்கமான விதத்தில் செயற்படுகின்றது என தெரிவித்துள்ள அப்ரீன் அக்தர் குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு விவகாரங்களில் மிகவும் நெருக்கமாக செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படைக்கு அமெரிக்க கடற்படை கலத்தை வழங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா விசேட கடல்ரோந்து விமானமொன்றை இலங்கைக்கு வழங்கவுள்ளதாகவும் அது அடுத்தவருடம் இலங்கைக்கு வந்துசேரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையை அமெரிக்க வலுவான சகாவாகக் கருதுகின்றது எனவும் அவர்தெரிவித்துள்ளார். (05)

## கைது செய்யப்பட்ட வீட்டுப் பணிப்பெண் இறப்பு சப் இன்ஸ்பெக்டர் உட்பட நால்வர் இடைநிறுத்தம்

கைதுசெய்யப்பட்ட வீட்டுப் பணிப்பெண் ஒருவரின் மரணம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர் உட்பட நால்வர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை உடனடியாக வேறு பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ் மா அதிபர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரை செய்துள்ளார் என ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு சப் - இன்ஸ்பெக்டர், இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் இரண்டு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர் ஒருவரின் தங்க மோதிரத்தை திருடிய குற்றச்சாட்டில் கடந்த 11 ஆம் திகதி வெலிக்கடை பொலி-ஸாரால் கைதுசெய்யப்பட்ட பெண் சுவாசக் கோளாறு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். பதுளைச் சேர்ந்த பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். (05)

## சட்ட விரோதமாக மரப் பலகைகளை கடத்தமுற்பட்டவர் புத்தளத்தில் கைது!





சட்ட விரோதமாக மரப் பலகைகளை கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்புப் பிரிவினரால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்ட விரோதமாக மரப் பலகைகளை டிப்பர் வாகனத்தில் கடத்திச் செல்வதாக புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொலிஸார் புத்தளத்தின் கல்குளம் பகுதியில் வைத்து டிப்பர் வாகனமொன்றை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது, அந்த வாகனத்திலிருந்து தேக்கு மற்றும் பாலை மரப் பலகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், மரப் பலகைகளை கடத்திச் சென்றுகொண்டிருந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் புத்தளம் பிராந்திய பொலிஸ் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கல்குளம் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

இதனையடுத்து, சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட மரப் பலகைகளை புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (05)

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து இன்னும் 20 கோடி ரூபா கிடைக்கவில்லை

### அரச அச்சகம் அறிவிப்பு

அரச அச்சகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட அச்சிடும் பணிகளுக்காக தேர்தல்கள் ஆணைக்குழு 20 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக அரசாங்க அச்சகத் திணைக்களம் பல முறை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளதாகவும் அதன் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். கொடுப்பனவுகளை ஆணைக் குழு பூர்த்தி செய்யத் தவறியமையால் திணைக்களம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்க அச்சக திணைக்களம் உள்ளூராட்சி தேர்தலுக்கான ஆவணங்கள் மற்றும் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணியை ஆரம்பித்தது.

திணைக்களம் ஏற்கனவே பல மாவட்டங்களின் தபால் வாக்கு சீட்டுகளை அச்சடித்து முடித்துள்ளது. இவை திணைக்களத்தின் வளாகத்தில் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*

காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை 21.05.2023 கதிர் 64

## இலங்கையில் முதலிட நெதர்லாந்து ஆர்வம்

இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு நெதர்லாந்து முதலீட்டாளர்கள் ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் திருமதி போனி ஹோபேக் தெரிவித்துள்ளார்.

கேகாலை அரநாயக்க 'அசுபினிஎல்லநீர்விநியோகத் திட்டம்'பொதுமக்களிடம்கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த திட்டம் இலங்கை, நெதர்லாந்து மற்றும் துருக்கிய ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டது. இலங்கையின் பொறியியலாளர்கள் தங்களுடைய பெறுமதியான அறிவினால் 2

## பறை இசையுடன் நுங்குத் திருவிழா

### வவுனியாவில் இன்று நடந்தது





பாரம்பரிய தமிழர் பறை இசையுடன் நுங்குத் திருவிழா வவுனியா, மரக்காரம் பளையில்இன்றுஇடம்பெற்றது.

நிகழ்வில் பனம்பொருள் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், பண்டாரவன்னியன் புத்தகசாலையின் புத்தக கண்காட்சியும் இடம்பெற்றது. இதில் அதிகளவிலான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், கடும் வெப்பத்தை போக்க நுங்கினையும் குடித்து மகிழ்ந்தனர்.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்ப்பாட்டில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (100)

# இந்திய பிரதமரான ராஜீவைக் கொன்ற காட்டுமிராண்டி புலிகளை அழித்தோம்

## கீச்சகப் பக்கத்தில் அயலுறவு அமைச்சர் அலி சப்ரி பெருமிதம்

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை 32வருடங்களுக்குமுன்னர் கொன்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை 14 வருடங்களுக்கு முன்னர் இலங்கை அழித்து என்று அயலுறவுத் துறை அமைச்சரர் அலி சப்ரி பெருமைப்பட்டுள்ளார்.**

**ராஜீவ் காந்தியின் நினைவு நாளையொட்டி அயலுறவுத்துறை அமைச்சர் தனது கீச்சக (ருவிற்றர்) பக்கத்தில் இந்தக் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.**

**விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள், அவர்களின் நிதிதிரட்டும் சர்வதேச வலையமைப்பினர், அரசியல் ஆதரவாளர்கள், புலனாய்வாளர்கள்இணைந்து உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் முன்னாள் பிரதமரை கொலை செய்தனர்.**

**அந்தக் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத இயக்கத்தை 14 வருடங்களிற்கு முன்னர் இலங்கை அழித்தது, இலங்கையில் அமைதி சமதானத்தை ஏற்படுத்தியது என அலிசப்ரி தனது பதிவில் தெரிவித்துள்ளார்.**



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா மீள உருவாக்க விரும்புகின்றதா என்று அந்த இயக்கத்தின் முன் னாள் போராளிகளிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அண்மையீல்விசாரணை நடத்தியிருந்த பின்னணியில்அயலுறவுத்துறை அமைச்சரின் இந்தக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அலி சப்ரி கடந்த ஆண்டும் இதே காலப் பகுதியில் அயலுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

ஆனால், அப்போது அவர் இந்த ஞாபகமூட்டை இந்தியாவிற்குச் செய்யவில்லை.

# நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் மீண்டும் கோரிக்கை

பெரமுனவும் ஐ.தே.கவின் கொள்கையைஏற்றுக்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டு

வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு கௌரவமாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டுமென ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கமீண்டும் கோரியுள்ளார்.





கேகாலை அரநாயக்க 'அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம்' பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கோரினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2018, பிரதமராக இருந்தபோது, இந்த குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட வந்தேன். தற்போது ஜனாதிபதி என்ற ரீதியில் அந்த நீர் திட்டத்தை திறந்துவைக்க வருவதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். இந்த திட்டத்தை நிறைவு செய்ய முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கபீர் ஹசீம் அமைச்சரினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் அடுத்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சர்ஜீவன்தொண்டமானின்பதவிக் காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கப்படும் இந்த குடிநீர் திட்டத்தால் சுமார் இரண்டு இலட்சம் மக்களின் குடிநீர் தேவை பூர்த்தியாகும். இந்த குடிநீர் திட்டத்திற்கு உதவிய அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்கு வரவில்லை. நாட்டில் இருந்த முதலீட்டாளர்களும் நாட்டை விட்டு வெளியேறினர்.

அவ்வாறான சூழலில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்இலங்கைக்குஉதவிகளை வழங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வாறான சூழ்நிலையில் நான் நாட்டின் பொறுப்பை ஏற்று, சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டுவரநடவடிக்கைஎடுத்துள்ளேன்.

ஏனென்றால்சிங்களவராகஇருந்தாலும் சரி, தமிழராக இருந்தாலும் சரி, மக்கள் பிச்சைக்காரர்களாகவாழவிரும்புவதில்லை. அவர்கள் பெருமையுடன் கண்ணியமாக வாழவே விரும்புகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடினமான நிபந்தனைகளை விதித்திருந்தது. ஆனால் எங்களுக்கு வேறு மாற்று வழிகள் இருக்கவில்லை. இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதியத்துடனானபேச்சுக்களில்இதேபோன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

அங்கு ஒரு அரசு சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் இருந்து விலகியது. ஆனால் நாம் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று சரியான முகாமைத்துவத்துடன் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள், நமது நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றியடையச் செய்து, பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக்கொள்கைக்கு தமது விருப்பத்தை வெளிப்படுத்தி தேவையானஆதரவைவழங்கியுள்ளனர். இந்த நாடு அடைந்துள்ள பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீளவேண்டுமானால் அந்த ஆதரவு மிகவும் முக்கியமானது. வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு கௌரவமாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# அபிவிருத்தியின் மீள் ஆரம்பம் ரணிலாலேயே சாத்தியமாகிறது

## இப்படிப் புகழ்கிறார் அமைச்சர் ஜீவன்

இன்று அபிவிருத்தி திட்டங்களை மீளவும் தொடங்கும் நிலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்தான் ஏற்பட்டுள்ளது என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



கேகாலை அரநாயக்க 'அசுபினி எல்ல நீர் விநியோகத்திட்டம்'பொதுமக்களிடம்கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நெதர்லாந்து அரசுக்கும், துருக்கி அரசுக்கும் எனது சிறப்பு நன்றிகள். ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் எண் 6, அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் வழங்கும் இலக்கை அடைய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இத்திட்டத்தைத்தொடக்கிவைப்பதற்குமுயற்சி எடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் இன்று இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை மகிழ்ச்சியே. இன்று இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் வெற்றியடைய தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தவர் ஜனாதிபதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இன்று ஜனாதிபதி இந்த நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்துள்ளார். அவர் முன்னின்று நடத்தும் சரியான பொருளாதார வேலைத் திட்டத்தினால் கைவிடப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்கக்கூடிய நிலையை நாடு எட்டியுள்ளது என்றே கூறவேண்டும் – என்றார்.

## அரச சொத்துக்களை சேதப்படுத்ததாது

# அபிவிருத்தித் திட்டங்களை பெறவே போராடவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவிப்பு

போராட்டக்காரர்கள் அரச சொத்துக்களைச் சேதப்படுத்தாது அபிவிருத்தித் திட்டங்களுக்காகவே போராடவேண்டும் என்று நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

கேகாலை அரநாயக்க 'அசுபினிஎல்லநீர்விநியோகத் திட்டம்'பொதுமக்களிடம்கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி 2018ஆம்ஆண்டுபிரதமராக இருந்த போது இந்த நீர் திட்டத்திற்குஅடிக்கல்நாட்டினார். அவர் இந்த குடிதண்ணீர்த் திட்டத்தை திறந்து வைக்க வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கேகாலை மாவட்டம்நீரினால்தன்னிறைவு பெற்றுள்ள போதிலும் மாவட்டத்தில் 45 சதவீதமான மக்களுக்குமட்டுமேகுடிதண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நீர்த்திட்டத்தின் மூலம் சுமார் 60சதவீதமான மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படும்என்பதைக்கூற விரும்புகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகம் 70 சதவீதமாக உயர்ந்துள்ளது. அம்பாறையிலும் அப்படித்தான். போராட்டக்காரர்கள் அரச சொத்துகளைஇத்துசேதப்படுத்தினாலும், இதுபோன்றபாரியதிட்டங்களைப்பெற்றுக்கொள்ளவே போராடவேண்டும் என்று நான் நம்புகிறேன் –என்றார்

# மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா காரைநகரில் சிக்கியது

(ந.லோகதயாளன்)



யாழ். மாவட்டம், காரைநகர்ப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகள் தரைப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. படைத்துறைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டு காரைநகர் கடற்கரைப் பகுதியில் உள்ள பற்றை ஒன்றிற்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த சமயம் அவற்றைத் தாம் கைப்பற்றினர் என்று படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் நிறை 60 2

# ரணில் மீண்டுமொரு தடவை அதிகாரத்தில் அமரவேண்டும்

## எஸ்.பி.திஸநாயக்கவின் எதிர்பார்ப்பு இது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டுமொரு தடவை அதிகாரத்தில் அமரவேண்டும் என்று எதிர்பார்ப்பதாக பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து இன்றையதினம் ஊடகங்களுக்குக்கருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் நெருக்கடியான நிலைமைகளைச் சமாளித்து தற்போது பொருளாதார மீட்சிக்காகஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி செயற்பட்டுக் 2

# போதகருக்காக காத்திருக்கிறது பொலிஸ்

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் கட்டுநாயக்க மிராக்கிள்டோம்மண்டபத்திற்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் இன்றைய தினம் இலங்கைக்கு வருகை தருவார் என்று ஏலவே சமூக வலைத்தளங்களில் பதிவு செய்திருந்தார். இந்த நிலையிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தச் செய்தி அச்சுக்குச் செல்லும் வரையில் அவர் நாட்டுக்கு வருகை தரவில்லை.

கௌதமபுத்தர், பௌத்தம் மற்றும் பிற மதங்களை அவமதித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்துக்களை வெளியிட்டமைக்காக 2

# கல்லடி தரிசனம் பாடசாலை ஆண்டு விழா




(பழுவூரான்)

கல்லடி தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் 31 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் இன்று மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை அதிபர் எஸ். இதயராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.லிங்கேஜ்வரன் சிறப்பு அதிதியாகவும், மண்முனை வடக்கு சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.ராஜ்மோகன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், தரிசனம் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாடல் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின. இந்தக் கொண்டிட்டத்தில் தரிசனம் பாடசாலை உப தலைவர் முருகு தயானந்தன், முன்னாள் தலைவர் எஸ்.ரவீந்திரன், தரிசனம் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகளவான மக்கள் தொடர்ச்சியான சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுக்கொள்ளும் இந்த அற்புதமான திட்டத்தை உருவாக்க முடிந்தது.

இது 81 மில்லியன் யூரோ செலவாகும் திட்டமாகும். இந்தத் திட்டம் திட்டமிடல் மற்றும் ஒன்றிணைந்து செயல்படுவது மட்டுமல்லாமல், அறிவைப் பகிர்ந்துகொள்வது மற்றும் மக்களுக்கு பெரும் நன்மைகளை வழங்கியது. எனவே, இன்று இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்.

வடிவமைப்பு என்பது சம வாய்ப்புகளை அணுக அனுமதிப்பது என்று நான் நினைக்கிறேன். தற்போது, புதிய சீர்திருத்த வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கையில் புதிய வர்த்தகங்கள் மற்றும் முதலீடுகளுக்கு தேவையான பின்னணியை உருவாக்கு–வதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

நெதர்லாந்து நிறுவனங்களும், முதலீட்டாளர்களும் இலங்கைக்கு வந்து இலங்கை நிறுவனங்கள் மற்றும் இலங்கை நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும், அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஆர்வமாக இருக்கின்றனர்.

இதுகுறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அது இலங்கை மக்களுக்கு உயர் நன்மைகளை பெற்றுத்தரும். அவர்களுக்கு மேலும் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் என நம்புகிறேன் என்றார்.

## ரணில் மீண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றது. அவ்விதமாகச் செயற்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைப் பலப்படுத்த வேண்டும். அது தொடர்ந்தும் முன்னோக்கிச் செயற்படுவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், நாட்டினை முழுமையாக மீட்டெடுத்து சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதி அதிகாரத்தில் அமர்த்த வேண்டும் – என்றார்.

## மறைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ கிராம். இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாப்பொதிகள் ஊர்காவற்றுறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைப் பொலிசார் இவற்றைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவுள்ளனர்.

## போதகருக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் உத்தரவின்பேரில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜெரோம் பெர்ணான்டோ வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து கோட்டே நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே தடை உத்தரவைப் பெற்றுள்ளனர். இருப்பினும் "போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இன்றையதினம் இலங்கைக்கு வருகை தருவதாக எமக்கு உத்தியோக பூர்வமாக எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. எனினும் அவரே வெளியிட்ட சமூக ஊடகப் பதிவின் அடிப்படையில்தான் நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ" தெரிவித்தார்.

# கல்லடி சித்தி விநாயகர் ஆலய தேருக்கான வடம் கையளிப்பு




(பழுவூரான்)

கல்லடி சித்தி விநாயகர் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு ஆலயத் தேருக்கான வடம் கன்னன்குடா கண்ணகையம்மன் ஆலயத்திலிருந்து இன்று அதிகாலை விடே பூஜையினைத் தொடர்ந்து கையளிக்கப்பட்டது. வடத்தை அடியார்கள் கரங்களில் ஏந்திய சுமார் 15 கிலோ மீற்றர் பயணித்து கல்லடி முருகன் ஆலயத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் சிறப்புப் பூசை இடம்பெற்றது. குறித்த வடம் கல்லடி முதன்மை வீதியூடாகக் கல்லடி சித்தி விநாயகர் ஆலயத்தை வந்தடைந்தது.

அங்கு சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டு, வடம் கன்னன்குடா கண்ணகையம்மன் ஆலய நிர்வாகத்தினால் உத்தியோகபூர்வமாக கல்லடி சித்திவிநாயகர் ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

# நைஜீரியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக வேலுப்பிள்ளை கணநாதன் நியமனம் பெற்றார்!

## நற்சான்றுப் பத்திரமும் நைஜீரிய ஜனாதிபதியிடம் கையளிப்பு

நைஜீரிய சமஷ்டி குடியரசுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள வேலுப்பிள்ளை கணநாதன் தனது நற்சான்று கடிதத்தை தலைநகர் அபுஜாவில் உள்ள இராஜாங்க இல்லத்தில் நைஜீரிய ஜனாதிபதி முஹம்மது புஹாரியிடம் அண்மையில் கையளித்தார்.

இந்த உத்தியோகபூர்வ வைபவத்தையடுத்து இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பின்போது நைஜீரிய ஜனாதிபதியும் உயர்ஸ்தானிகரும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது கூட்டத்தை நினைவுகூர்ந்த ஜனாதிபதி புஹாரி, தனது நட்பு ரீதியான வாழ்த்துக்களை இலங்கை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

மேற்படி சந்திப்பின்போது உயர்ஸ்தானிகர், இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்தும், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பிலும் சுருக்கமாக ஜனாதிபதி புஹாரியிடம் விவரித்தார்.

அதற்கு பதிலளித்த புஹாரி, கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றானது பல நாடுகளிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், தனது நாடு இலங்கையிலான அபிவிருத்திகளை மிகுந்த ஆர்வத்துடன் பின்பற்றுவதாகவும் குறிப்பிட்டு, பெரும் நம்பிக்கையை தரும் வகையில் அடையப்பட்ட முன்னேற்றம் குறித்து திருப்தியை வெளிப்படுத்தினார்.

உயர்ஸ்தானிகர் கணநாதன் இலங்கைக்கும் நைஜீரியாவுக்கும் இடையிலான 10 வருடகால இராஜதந்திர உறவுகள் குறித்து குறிப்பிடுகையில் –

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் ஆபிரிக்காவுடன் குறிப்பாக, ஆபிரிக்காவில் முன்னிலையில் உள்ள பொருளாதார நாடுகளில் ஒன்றான நைஜீரியாவுடன் பிராந்தியங்களுக்கிடையிலும் இரு நாடுகளுக்கிடையிலும் கூட்டுறவை வலுப்படுத்தும் வகையில் குறிப்பிடத்தக்க உறவுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகள், உலக தென் பிராந்திய நாடுகள், ஜி7 மற்றும் அணிசேரா நாடுகள் என்பவற்றின் அங்கத்தவர்கள் என்ற வகையில் இலங்கையும் நைஜீரியாவும் உலக விவகாரங்கள் தொடர்பில் பொதுவான கண்ணோட்டங்களை பகிர்வதாக கோடிட்டுக் காட்டிய உயர்ஸ்தானிகர் கணநாதன், நைஜீரிய சமஷ்டிக் குடியரசால் சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவு குறித்து பாராட்டை தெரிவித்ததுடன், இரு தரப்பு உறவுகளையும் வலுப்படுத்த அதுபோன்ற பெறுமதி மிக்க ஆதரவை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி புஹாரி, இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார கூட்டுறவை விருத்தி செய்வது பாரிய முக்கியத்துவம் மிக்கதாக உள்ளது எனத் தெரிவித்து, முதலீட்டுக்கு குறிப்பாக, புதுப்பிக்கக்கூடிய வளங்கள், எண்ணெய், எரிவாயு, விவசாயம் சார்ந்த தொழிற்றுறைகள், தொலைத்தொடர்பாடல்கள், திண்ம கனிப்பொருள்கள் முதலியவற்றுக்கு வெகுமதியளிக்கும் வகையிலான வாய்ப்புகள் உள்ளன என சுட்டிக்காட்டினார். (05)

# வருமான வரி செலுத்த தவறினாரா போதகர் ஜெரோம் பெர்ணாண்டோ?



போதகர் ஜெரோம் பெர்ணாண்டோவின் குளோரியஸ் சேர்ச் வருமான வரி சர்ச்சையில் சிக்குண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதகர் ஜெரோம் அரசாங்கத்துக்கு வரிகளை செலுத்தினரா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் இதனை உறுதி செய்–துள்ளதுடன் தனிப்பட்ட அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் ஏனைய விவரங்கள் தங்களிடம் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் குளோரியஸ் சேர்ச்சின் அதிகாரியொருவரிடம் கேள்வி எழுப்பியவேளை அவர் பதில் தருவதாகத் தெரிவித்தபோதிலும் பின்னர் தொடர்புகொள்ளவில்லை என சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஜெரோம் பெர்ணாண்டோவின் தேவாலய நிர்வாகத்துக்கு எந்த வரிச்சலுகைகளையும் வழங்கவில்லை என உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பௌத்த ஆலயங்கள் அரசாங்கத்தில் மதவழிபாட்டுத்தலங்கள் என பதிவு செய்யப்பட்டால் வரிவிலக்கு அளிக்கப்படுவது வழமை. (05)

# கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை புதிய ஆளுநருக்கு பக்கபலமாக இருக்கும்

## வாழ்த்துச்செய்தியில் பணிப்பாளர் தெரிவிப்பு

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமானுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சார்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

புதிய ஆளுநருக்கு அவர் விடுத்துள்ள வாழ்த்துசெய்தியில்–

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண ஆளுநர்களாக இருந்தவர்களுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நிர்வாகம் ஒன்றித்து செயற்பட்டு பிராந்திய சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகச் செய்தோம். இப்போது புதிதாக கிழக்கு ஆளுநராக கடமையேற்றிருக்கும் செந்தில் தொண்டமானுடனும் ஒன்றிணைந்து செயற்பட்டு பிராந்திய சுகாதார மேம்பாடு, சுகாதாரத் துறைசார் வேலைத்திட்டங்களைச் செய்யத் தயாராக உள்ளோம்.



கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவத்துறை மேம்பாட்டுக்காக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சார்பில் வழங்கவேண்டிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளதுடன் கிழக்கு மாகாணத்தை சகல துறைகளிலும் முன்னேற்றமான மாகாணமாக கட்டியெழுப்ப புதிய ஆளுநர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்த அவர் புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். (05)

# சிங்கப்பூரில் மர்மமாக இறந்த பெண்ணின் சடலம் நேற்று இலங்கை வந்தடைந்தது!

சிங்கப்பூரில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்த இலங்கை பெண்ணின் சடலம் நேற்று (சனிக்கிழமை) இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தங்கொடுவ – மொட்டேமுல்ல பகுதியைச் சேர்ந்த 41 வயதான நதிகா தில்ஹானி பெர்னாண்டோ என்ற திருமணமான பெண்ணே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

குறித்த பெண் சிங்கப்பூருக்கு வீட்டு பணிப்பெண்ணாக சென்ற நிலையில், வீட்டு உரிமையாளரின் கடும் அழுத்தத்தை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் அவர் அடுக்குமாடி கட்டடத்தில் இருந்து பாய்ந்த காணொளியொன்றும் வெளியாகியுள்ளது.



சிங்கப்பூர் பிரேத பரிசோதனை அறிக்கையில், உயரமான மாடியில் இருந்து விழுந்ததில் ஏற்பட்ட காயங்களால் மரணம் ஏற்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், விசாரணை நடத்துமாறும் அவரது உறவினர்கள் கோரிக்கை விடுத்த நிலையில், சடலம் நீர்கொழும்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று இரவு நதிகாவின் சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் நதிகாவின் பூதவுடல் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தங்கொடுவ, மோதமுல்லையில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இந்நிலையில், சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயமும் அவரது மரணம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (05)

# முல்லைத்தீவில் பற்றி எரிந்த வீடு: பெருமளவான பணம் தீயில் நாசம்!





முல்லைத்தீவில் விசுவமடு மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் திடீரென குப்பி விளக்கு தீப்பற்றியதில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து கடந்த வெள்ளிக்கிழமை பதிவாகியுள்ளது.

விபத்தின் போது வீட்டின் ஒரு பகுதியும் வீட்டில் இருந்த ஆடைகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் 45 ஆயிரம் ரூபா பணம் என்பன தீயில் எரிந்துள்ளன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக விசுவமடு மேற்கு கிராம அலுவலகருக்கு தெரிவித்திருந்த போதிலும் கிராம சேவையாளர் வந்து பார்வையிடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தீ விபத்து தொடர்பாக புது குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள போதிலும் சம்பவம் தொடர்பாக எந்தவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புக்கள் மற்றும் வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளனர். (05)

# போதையில் அநாகரிகமாக நடந்த சிறுவர்கள் பாணந்துறையில் கைது

*பாணந்துறையில் உள்ள சுற்றுலா ஹோட்டலுக்கு அருகில் போதையில் அநாகரீகமாக நடந்துகொண்ட இரண்டு சிறுமிகள் உட்பட ஆறு பேர் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர் என பாணந்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு 18 வயதுக்குஉட்பட்ட சிறுமிகளும், ஆண் ஒருவரும், இளம் பெண் ஒருவரும் மற்றும் இரண்டு இளைஞர்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*சுற்றுலா ஹோட்டல் ஒன்றிற்கு அருகில் குழுவொன்று அநாகரீகமாக நடமாடுவதாக பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பாணந்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு நிலையப்பொறுப்பதிகாரி இவர்களைக் கைது செய்துள்ளனர்.*

*இந்த குழுவினர் பொலிஸாரை கண்டதும் காரில் தப்பியோட முயற்சித்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று சிறுமிகளும் நாகரீகமற்ற ஆடைகளை அணிந்திருந்தனர் எனவும், அவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த தயங்குவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)*


# இந்திய மின்சக்தி அமைச்சரை சந்தித்தார் மிலிந்த மொறகொட!

இந்தியாவின் மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஸ்ரீராஜ்குமார் சிங்கிற்கும் இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது இராமாயணத்தின்படி சீதை சிறைபிடிக்கப்பட்ட இடம் என்று நம்பப்படும் இலங்கையின் சீதாஎலியாவில் கோயிலுக்கு அருகில் உள்ள ஓடையில் இருந்து பெறப்பட்ட கல்லொன்றை உயர்ஸ்தானிகர் மொரகொட இந்திய அமைச்சர் சிங்கிற்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவுடனான மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் பற்றியும் இந்த சந்திப்பின் போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரோஜா மலருக்கு அதிக கிராக்கி



தற்போது ரோஜா சாகுபடிக்கு அதிக கிராக்கி உள்ளதாக மலர் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெலிமடை, ஊவா பரணகம, கெப்பிட்டிபொல, பொரலந்த, தியத்தலாவ, பண்டாரவளை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் ரோஜாக்கள் பயிரிடப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக கொவிட் பாதிப்பு காரணமாக மலர் விவசாயிகள் கடும் நெருக்கடியை சந்தித்து வந்தனர்.

இருப்பினும், ரோஜா சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள் விலை குறைந்தால், அது தங்களின் பொருளாதார நிலையில் சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# நிதி கையாளல், நுண்கடன் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு





சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் நிதி கையாளல் மற்றும் நுண்கடன்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கின் வழிகாட்டலில் சாய்ந்தமருது விதாத வள நிலையத்தில் சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் ஐ.எம்.நாசர், மத்திய வங்கியின் திருகோணமலை கிளையின் முகாமையாளர் பி.நிரோசன் கலந்துகொண்டதுடன் அதிதிகளாக விஞ்ஞான தொழிட் ப உத்தியோகத்தர் யு.எம்.முஸம்மில், பெண்கள் அபிவிருந்தி உத்தியோகத்தர் எம்.வி.நஸ்லா, பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் ஏ.அபிறா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எம்.எம்.நாஸிர் அலி மற்றும் எம்.ஐ.எப்.சுசான் சிஹ்னாஸ் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெறும் கையால் முழம் போடுவதை நிறுத்தவேண்டும் அரசுத் தலைவர்

வெறும் கையில் முழம் போடுவது என்ற பழமொழி அரசுத் தலைவர ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் பொருந்தும். அப்படித்தான் அவர் தமிழ்த் தரப்புடன் தான் தொடங்கியுள்ள பேச்சு வெற்றிபெறும் என்று தெரிவித்திருக்கும் கருத்து.

“போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் இந்த ஆட்சி அதிக கவனம் செலுத்தியுள்ளது. எனினும், வடக்கு, கிழக்கு மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பமும் இதுவாக உள்ளது. எனது விருப்பமும் அதுவே.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை. தீர்வை நாம் விரைந்து காண வேண்டும். தமிழ்க் கட்சிகளுடன் நான் தொடங்கியுள்ள அரசியல் தீர்வுக்கானபேச்சு வெற்றியடையும்என்றமுழுநம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை எனக்கு வழங்கவேண்டும்” என்று கொழும்பில் செய்தியாளர் ஒருவரிடம் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவருக்குப் பதிலளிக்கும் வகையில் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த மூத்த தமிழ்த் தலைவரான இரா.சம்பந்தனோ, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுத்த பின்னர் அரசுத் தலைவர் பேச வரவேண்டும் என்கிறார்.

நில ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், படுகொலை, அரசியல் கைதிகள் விவகாரம், அதிகாரப் பகிர்வு உள்ளிட்டவைகள் குறித்து இறுதியாக நடைபெற்ற பேச்சின்போதும்கூட எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தன், தீர்வு குறித்து நியாயமான அடிப்படையில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் அரசுத் தலைவர் முதலில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து முடிவொன்றை எடுத்த பின்னர் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்றிருக்கிறார்.

ஆகமொத்தத்தில், கடந்த 14 ஆண்டுகளில் ரணில் பல தடவைகள் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்தினாலும் தீர்வு குறித்த எந்த முடிவும் அவரிடம் இல்லை என்பதையே சம்பந்தனின் கூற்றுத் தெளிவுபடுத்துகின்றது. வெறும் கையால் முழம் போடுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அதனால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. அவராலும் இலங்கையின் ஏனைய ஆட்சியாளர்களாலும் இன்னும் நீண்ட காலத்திற்கு பன்னாட்டுச் சமூகத்தையும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதை கனடாவின் அண்மைய நிலைப்பாடு புலப்படுத்துகின்றது. ரணிலும் கொழும்பும் இதேபோக்கில் தொடர்ந்து பயணித்தால் மெல்ல மெல்லப் பல நாடுகளும் கனடாவைப் பின்பற்றித் தீர்மானங்களை எடுப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். பன்னாட்டுச் சமூகத்தில் இலங்கை தனிமைப்பட்டுப்போகும்.

அதனைத் தவிர்க்க வேண்டுமாயின் ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றும் சித்து விளையாட்டுக்களை விடுத்து உருப்படியான ஏதாவது ஒரு தீர்வை முன்வைத்துத் தமிழர் தரப்புடன் பேசுவதற்கு முன்வரவேண்டும்.

# காரைக்கால் – காங்கேசன்துறை கப்பல் சேவை தாமதமடையலாம்

## இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுமதி கிடைக்காமையால்

இந்தியாவின்காரைக்காலுக்கும், இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை இந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், இந்திய வெளிவிவகார அமைச்சின் இறுதிக்கட்ட அனுமதிகள் வழங்கப்படாமையால் சேவைகளை ஆரம்பிப்பதில் காலதாமதம் நீடிப்பதாக ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பயணிகள் கப்பல் சேவை முன்னதாக ஏப்ரல் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மே 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கூறப்பட்டிருந்தது.

தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுமதி எப்போது கிடைக்கும் என்பது தெரியாததால் கப்பல் சேவை ஆரம்பிப்பதில் இழுபறி நீடித்து வருகின்றது.

இதேவேளை, காரைக்கால் துறைமுகத்தை இந்தியாவின் அதானி குழுமம் பொறுப்பேற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அனுமதி கிடைத்தாலும், காரைக்கால் துறைமுகத்தின் ஆரம்பக்கட்ட உட்கட்டுமான மறுசீரமைப்புப் பணிகள் முடிந்த பின்னரே பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் எதிர்வரும் 5ஆம் திகதி சென்னை துறைமுகத்திலிருந்து 1,600 சுற்றுலாப் பயணிகளுடன் 'எம்ப்ரஸ்' என்ற பயணிகள் கப்பல் இலங்கையை நோக்கி வருகை தரவுள்ளது.

இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை, திருகோணமலை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்லவுள்ளது. 3 நாள் சுற்றுலாவுக்காக இந்திய ரூபாவில் 85 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

# அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட தவறு; குடும்ப பெண் பரிதாபமாக உயிரிழப்பு

## உறவினர்கள் குற்றச்சாட்டு

களுத்துறை போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையில் ஏற்பட்ட தவறு காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

களுத்துறை பகுதியை சேர்ந்த 53 வயதுடைய குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு வயிற்றில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக களுத்துறை போதனா வைத்தியசாலையில் பெருங்குடல் அறுவை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சையின் பின்னர், நோயாளிக்கு திரவ உணவை வழங்குமாறு சிறப்பு மருத்துவர் மருத்துவமனைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய, நோயாளிக்கு திரவ உணவு மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் உணவு வயிற்றில் இருந்து உணவு வெளியேறி துர்நாற்றம் வீசியுள்ளது.

இது தொடர்பில் வைத்தியசாலை ஊழியர்கள், தாதியர்களிடம் அறிவிக்கப்பட்டும் இது சாதாரண நிலை என்று கூறியுள்ளனர். உடனடியாக சத்திரசிகிச்சை செய்த வைத்தியரை சந்திக்க வேண்டுமென நோயாளியின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தும் வைத்தியர் நோயாளியை பார்க்க வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதனை தொடர்ந்து குறித்த பெண்ணின் உடல் நிலை மோசமடைந்தமையால் களுத்துறை போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் உறவினர்களின் வற்புறுத்தலின் பேரில் அம்புலன்ஸ் மூலம் ராகம போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த பெண் உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இடத்திலிருந்து அதிகப்படியான உணவு வெளியேறியதால், அந்த பகுதியில் கிருமித் தொற்று ஏற்பட்டமையே மரணத்துக்குக் காரணம் என ராகம வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலையின் கவனயீனம் காரணமாகவே குறித்த பெண் உயிரிழந்துள்ளார் எனக் குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

# மனைவியின் தலைமுடி மொட்டையடிப்பு: இங்கிலாந்தில் இலங்கையர் கைதானார்!

தனது மனைவியைத் தாக்கிய சம்பவத்தில் இலங்கை ஒருவர் இங்கிலாந்தின் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவியின் தலைமுடியை வெட்டி மொட்டையடித்து, அவரை இடுப்புப்பட்டியால் தாக்கி கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

45 வயதான இந்த இலங்கையரும் அவரது மனைவியும் 2004ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்றுள்ளனர். இதன்பின்னர் 2007ஆம் ஆண்டு மென்சஸ்டரில் குடியேறியுள்ளனர்.

அந்த காலம் தொட்டே குறித்த இலங்கையர், தமது மனைவியைக் கொடுமைப்படுத்தி வந்தார் என நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமது மனைவி தொழில் செய்து வந்தபோதும், கணவரான இலங்கையர் தொழில்களில் ஈடுபடவில்லை.

இந்தநிலையில், தீய பழக்கங்களில் இருந்தும் மோசமான நண்பர்களிடம் இருந்தும் கணவரைக் காப்பாற்றும் முயற்சியின்போதே இலங்கை பெண், சித்திரவதைகளுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18,900 கோடி ரூபா புதிய நாணயத்தை அச்சிட்டது இலங்கை மத்திய வங்கி!

இலங்கை மத்திய வங்கி கடந்த வாரத்தில் 189 பில்லியன் ரூபா (18,900 கோடி ரூபா) புதிய நாணயத்தை அச்சிட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மத்திய வங்கி மேலும் 180 பில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு கடனாக வழங்கியுள்ளது.

அதற்கமைய, கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்திற்கு வழங்கிய மொத்த கடன் தொகை 369 பில்லியன் ரூபாவாகும் (936,900 கோடி ரூபா).

சமகால மத்திய வங்கி ஆளுநராக நந்தலால் வீரசிங்க கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 1061 பில்லியன் ரூபா பெறுமதியான புதிய நாணயம் அச்சிடப்பட்டுள்ளது.

இது ஒரு ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.(05)



# பசறையில் பெண் பூசாரி உள்ளிட்டமூவர் புதையல் தோண்டிய குற்றத்தில் கைது

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை – பிபில வீதி, 13ஆம் கட்டைப் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு – ஹோமாகம பகுதியைச் சேர்ந்த பூசாரியான 60 வயதுடைய பெண்ணொருவரும், 30 மற்றும் 40 வயதுடைய ஆண்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உட்படப் பூசைப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பகுதியில், ஆங்கிலேயர் காலத்தில் ஆயுத களஞ்சியசாலை இருந்தது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த முன்னோர்கள் கூறி வந்துள்ளனர் என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## மாணிக்கவாசகர் எழுதிய நூல் வெளியீடு

மூத்த செய்தியாளர் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எழுதிய 'நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27.05.2023 ஆம் திகதி வவுனியா கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில் பிற்பகல் 3 மணி யளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நூல்வெளியீட்டு நிகழ்வு வவுனியா வடக்கு வலய ஆசிரிய மத்திய நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை உப பீடாதிபதி ந.பார்தீபன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்

## மட்டக்களப்பில் அரச பஸ் மோதி இளைஞர் பரிதாபகரமாகச் சாவு

மட்டக்களப்பு– காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் அரச பஸ் மோதியதில் 23 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றையதினம் (சனிக்கிழமை) பதிவாகியுள்ளது.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த பஸ், கிரான்குளம் பகுதியில் மனநிலை பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் இளைஞன் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பஸ் சாரதியை கைது செய்துள்ளதுடன் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (05)